Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, MARCH 10 2025

திங்கட்கிழமை 10, மார்ச் 2025 | ஒளி: 10 கதிர் 175 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE




## 11 நள்ளிரவு முதல் தடை

2024(2025)ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், செவ்வாய்க்கிழமை (11) நள்ளிரவு 12.00 மணி முதல் பரீட்சைகள் முடிவடையும் வரை, பரீட்சை தொடர்பான மேலதிக தனியார் வகுப்புக்கள், கருத்தரங்குகள், எதிர்பார்ப்பு வினாக்களை வெளியிடுதல் என்பன தடை செய்யப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது. எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை க.பொ.த சாதாரண தரப் பரீட்சை நடைபெறவுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள 3,527 பரீட்சை நிலையங்களில் பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## “அனுரவால் அர்ஜுனவின் முடிக்கு சேதமில்லை”



அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக இருக்கும் வரை, அர்ஜுன மகேந்திரனுக்கு ஒரு முடிக்குக் கூட பாதிப்பு ஏற்படாது என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஹோமாகம தேர்தல் செயல்பாட்டு மையத்தை நிறுவுதல் மற்றும் பிரதேச சபை வேட்பாளர் அணியை அறிமுகப்படுத்துதல் தொடர்பாக ஹோமாகமவில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சம்பிக்க ரணவக்க இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

“வெசாக் சீட்டு விளையாடியதற்காக பியங்கர ஜயரத்ன கைது செய்யப்பட்டுள்ளார்." மத்திய வங்கியில் இடம்பெற்ற பாரிய மோசடி சந்தேக நபரான அர்ஜுன மகேந்திரனை அழைத்து வருவதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும், அவர் இன்னும் அழைத்து வரப்படவில்லை. தேசபந்து தென்னக்கோன் கைது செய்யப்படவில்லை. அவருக்குப் பின்னால் டிரான் அலஸ் இருக்கிறார். டிரான் மீது அனுர திசாநாயக்க கை வைக்க மாட்டார் என்றார்.

“ரணில் விக்ரமசிங்க போன்றவர்களை விமர்சித்து, அல் ஜசீரா சம்பவம் போன்றவற்றிலிருந்து விளம்பரம் பெறுவதற்குப் பதிலாக, அரசாங்கம் பாராளுமன்றத்தில் முறையாக சட்டங்களை உருவாக்கி, குற்றவாளிகளைக் குற்றம் சாட்டி தண்டித்திருக்க வேண்டும்" என்று பாட்டலி சம்பிக்க ரணவக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

### இந்தியர்களில்

## 15 பேர் நாடு கடத்தப்பட்டனர்

டி.கே.பி.கபில

சுற்றுலா விசாக்களின் கீழ், நாட்டுக்குள் நுழைந்து யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள ஒரு மரக் கொட்டகையில் தீவிரவாத மதப் பிரசாரகர்களாகவும், மரவேலை செய்பவர்களாகவும் பணிபுரிந்த இந்தியப் பிரஜைகள் 15 பேர் குடிவரவு மற்றும் குடியகல்வு துறை புலனாய்வாளர்கள் குழு கைது செய்து நாடு கடத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

### கொழும்பில்

## பின்வாங்கியது தமிழரசு



**வேட்பு மனுக்கள் சமர்ப்பிப்பு, வேட்பாளர்கள் தெரிவு மற்றும் தேர்தலைக் கையாளுதல் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது**

க.அகரன்

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதில்லை என்று தமிழரசுக் கட்சியின் மத்தியக் குழு தீர்மானித்துள்ளது என கட்சியின் பதில் செயலாளரான ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் கொழும்பில் போட்டியிடுகின்றமை தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அந்த வகையில் கொழும்பு மாநகரசபையின் கீழ் தமிழ் மக்கள் வசிக்காத வட்டாரங்களும் உள்ளன. அங்கு வேட்பாளர்களை நியமிப்பது சவாலான ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளது. இங்கு ஏனைய கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டாலும் அதன் வேட்பாளர்களின் பின்புலம் தொடர்பாக ஆராய்வதில் பல்வேறு சவால்கள் உள்ள காரணத்தினால் இம்முறை கொழும்பில் போட்டியிடுவதில்லை என மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது என தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் வவுனியாவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்றது.

தொடர்ச்சி P2



### திசைகாட்டியினர் கூறும்

## “சாபம் பொய்யானது”

சுதந்திரம் அடைந்து 76 ஆண்டுகளாக நாட்டுக்கு சாபமே நேர்ந்ததாக திசைகாட்டியும், மக்கள் விடுதலை முன்னணியும் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றன. 76 வருட வரலாற்றில் நாட்டுக்கு சாபமே நேர்ந்ததாகத் தெரிவித்து வருகின்றனர், இந்த செய்தி தவறானது என்பதைத் தரவு ஆதாரங்களுடன் நிரூபிக்க முடியும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## “ரணிலுக்கு எதிராக விசாரணை”

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து அரசாங்கம் புதிய விசாரணையைத் தொடங்கும் என்று பொதுப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இலங்கை கிரிக்கெட் வீரருக்கு பிணை



பிலியந்தலை, கொலமுன்னவில் உள்ள ஒரு வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து ஒருவரைத் தாக்க முயன்றதற்காக இலங்கை கிரிக்கெட் வீரர் அஷேன் பண்டார கைது செய்யப்பட்டார்.

பிலியந்தலை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து இலங்கை கிரிக்கெட் வீரர் அஷேன் பண்டார சனிக்கிழமை (08) கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## “சொத்துக்கள் முடக்கப்படும்”



முன்னாள் பொலிஸ் மா அதிபர் (ஐ.ஜி.பி) தேசபந்து தென்னகோன் தொடர்ந்து நீதிமன்ற நடவடிக்கைகளைத் தவிர்த்து வந்தால், அவரது அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் சட்ட விதிகளின்படி முடக்கப்படும் என பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இருவரும் போதையில் உறக்கம்: 25 பேர் நிர்க்கதி



இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸின் சாரதி மற்றும் உதவியாளர் குடிபோதையில் தூங்கிக் கொண்டிருந்ததால், பேருந்தில் பயணிக்க வேண்டிய பயணிகள் பொலிஸ் ஜீப்பில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

வெலிகந்தையில் இருந்து கல்கந்த வரை இயக்க திட்டமிடப்பட்ட பேருந்தின் சாரதி மற்றும் உதவியாளர் வெலிகந்த டிப்போவின் ஓய்வறையில் குடிபோதையில் தூங்கிக் கொண்டிருந்ததால், பேருந்தில் பயணிக்க வேண்டிய பயணிகள் பொலிஸ் ஜீப்பில் அழைத்து செல்லப்பட்டனர்.

தொடர்ச்சி P2

## சமலுக்கு ‘குட்டி’ ஆசை



முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, தனக்கு ஏற்பட்ட ‘குட்டி’ ஆசையை ஞாயிற்றுக்கிழமை (09) வெளிப்படுத்தினார்.

கார்ல்டன் மாளிகைக்கு வந்த உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் மத்தியில் கருத்துரைத்த அவர், வேட்பாளர்கள் விரும்பினால், இந்த முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் தானும் போட்டியிடுவேன் என்றார்.

தொடர்ச்சி P2



## இலங்கையில் சிவகார்த்திகேயன்

தென்னிந்திய நடிகர் சிவகார்த்திகேயன் உட்பட படக்குழுவினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.


அமரன் வெற்றிக்குப் பின் நடிகர் சிவகார்த்திகேயன், ‘பராசக்தி’ படத்தில் நாயகனாக நடித்து வருகிறார். இயக்குநர் சுதா கொங்காரா இயக்கிவரும் இப்படத்தின் படப்பிடிப்பு சென்னை, காரைக்குடியில் நடைபெற்றது. தொடர்ந்து, மதுரையில் சில நாட்கள் படப்பிடிப்பை நடத்தியுள்ளனர்.

தொடர்ச்சி P2

### ஜனாதிபதி அனுர– ஜோர்ஜிவாவுக்கு இடையில்

## இருதரப்பு ரீதியான இணக்கம்





ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிரிஸ்டலினா ஜோர்ஜிவா ஆகியோருக்கு இடையிலான நிகழ்நிலை சந்திப்பு வெள்ளிக்கிழமை (07) நடைபெற்றது.

கடந்த 2023ஆம் ஆண்டு மாரச் மாத்தில் ஆரம்பமான 48 மாதங்கள் நீடிக்கப்பட்ட நிதி வசதிக்கு (EFF) அமைவான ஒப்பந்தம் பகுதியளவில் நிறைவு செய்யப்பட்டிருக்கும் இந்த தருணத்தில் இலங்கை மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு இடையிலான ஒத்துழைப்பைப் பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 15 பேர் நாடு கடத்தப்பட்டனர்

இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வு விதிமுறைகளை மீறி இந்த செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தால் வழங்கப்பட்ட இலவச சுற்றுலா விசாகளின் கீழ் நாட்டிற்கு வந்திருந்தனர்.

அவர்களில் இருவர், யாழ்ப்பாணத்தின் மாதல் பகுதியில் நோய்களைக் குணப்படுத்துவதற்கான தீவிரவாத மத சேவையை நடத்தத் தயாராகி வந்தனர், மேலும் இந்தப் பகுதியில் உள்ள இந்து தேசியவாத அமைப்புகளால் அவர்களுக்கு எதிராக ஒரு போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட இரண்டு மத குருமார்களையும் நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள ஒரு மரக் கொட்டகையில் சிற்ப வேலை செய்து கொண்டிருந்த மேலும் 08 இந்தியப் பிரஜைகள் கைது செய்யப்பட்டு, பலாலி விமான நிலையத்திலிருந்து இந்தியாவின் சென்னைக்கு சனிக்கிழமை (08) நாடு கடத்தப்பட்டனர்.

அதேபோல், யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள உணவகங்களில் பணிபுரிந்து வந்த மேலும் 05 இந்தியர்கள் பலாலி விமான நிலையத்திலிருந்து இந்தியாவின் சென்னைக்கு சனிக்கிழமை (08) நாடு கடத்தப்பட்டனர்.



# இலங்கையில் சிவகார்த்திகேயன்

முதல்கட்ட படப்பிடிப்பு மதுரையில் நிறைவடைந்ததாக சுதா கொங்காரா தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், பராசக்தியின் அடுத்தகட்ட படப்பிடிப்பு இலங்கையில் ஆரம்பிக்கவுள்ளது. இதற்காக, சிவகார்த்திகேயன் மற்றும் இயக்குநர் சுதா கொங்காரா உள்ளிட்ட படக்குழு இலங்கை வருகை தந்துள்ளனர்.

இந்நிலையில், கட்டுநாயக்க விமான நிலையத்தை சனிக்கிழமை (08) வந்தடைந்த சிவகார்த்திகேயனுக்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

## கொழும்பில்
# பின்வாங்கியது தமிழரசு



தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்கள் சமர்ப்பிப்பு, வேட்பாளர்கள் தெரிவு மற்றும் தேர்தலைக் கையாளுதல் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.

குறித்த கூட்டத்தில் பதில் பொதுச்செயலாளர் எம்.எ.சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான து.ரவிகரன், க.கோடீஸ்வரன், எஸ்.சிறிதரன், ஞா.சிறிநேசன், குகதாசன், சிறிநாத், மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# "சாபம் பொய்யானது"

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காக கொண்டு அரநாயக்க தேர்தல் தொகுதியில் மக்கள் சந்திப்பொன்று ஞாயிற்றுக்கிழமை (09) இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன், நாட்டில் 1950-1955க்கு இடைப்பட்ட காலப்பிரிவில் ஆயுட்காலம் சராசரியாக 54.5 ஆண்டுகளாகக் காணப்பட்டன. 2020ஆம் ஆண்டில், ஒரு நபரின் சராசரி ஆயுட்காலம் 76.6 ஆண்டுகள் ஆகும். 54 முதல் 76 வயது வரையிலான ஆயுட்கால அதிகரிப்பு இவர்கள் கூறும் இந்த சாபத்தால் தான் ஏற்பட்டதா ? என கேள்வி எழுப்பினார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, நீண்ட காலம் வாழ்வது 76 ஆண்டுகளின் சாபமா என்று கேள்வி எழுப்புகிறேன்.

1945-47இல் ஒரு ஆண் 46.8 வருடங்களும் ஒரு பெண் 44.7 வருடங்களும் என்றவாறு ஆயுட்காலம் காணப்பட்டன.

2021ஆம் ஆண்டளவில் ஒரு ஆண் 72.9 வருடங்களும், ஒரு பெண் 80.1 வருடங்களும் சராசரியாக உயிர் வாழ்ந்து வருகின்றனர்.

திசைகாட்டி தரப்பினர் இந்த விடயங்களைப் பொய்யாக அரசியல் கதையாகவே பிரஸ்தாபித்து வந்தனர். உண்மையான தரவுகளின் அடிப்படையில் சாபம் என்பதை இவர்கள் பிரஸ்தாபித்து வரவில்லை. வெறுமனே அரசியல் கதையாகவே இதனை தெரிவித்து வந்தனர்.

குழந்தை இறப்பு விகிதத்தைப் பார்க்கும்போதும்,1950-1955 காலகட்டத்தில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 1000 பிறப்புகளுக்கு 103.9 இறப்புகள் ஏற்பட்டுள்ளன.

2015-2020 ஆகும் போது, இது 6.5 ஆகக் குறைந்துள்ளது.

5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு சதவீதம் இந்தளவு குறைந்து காணப்படுகின்றமை சாபமா என்று கேள்வி எழுப்புகிறேன்.

எனவே, மக்கள் இது உண்மையா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க வேண்டும். எந்த ஒன்றையும் சும்மா கூறிவிட முடியாது. திசைகாட்டிக் கூறும் சபாக் கதையின் உண்மையை மக்கள் விமர்சன ரீதியாக ஒப்புநோக்கி யதார்த்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தாய் இறப்பு சதவீதத்தைப் பார்த்தால், 1930 களில் 100,000 பிறப்புகளுக்கு 2,000 தாய்மார்கள் தங்கள் உயிரை இழந்துள்ளனர். 1950-1960 இல், 100,000 பிறப்புகளுக்கு 500 முதல் 600 தாய்வழி இறப்புகள் பதிவாகியுள்ளன.

2020ஆம் ஆண்டில், 100,000 பிறப்புகளுக்கு 29 தாய்வழி இறப்புகள் பதிவாகியுள்ளன. 76 ஆண்டுகளில் நாம் அடைந்துள்ள அளப்பரிய முன்னேற்றத்தை இந்தத் தரவுகள் மூலம் அறியலாம்.

நாம் அடைந்த முன்னேற்றத்தில் திருப்தி அடையாமல், மேலும் விரைவான வளர்ச்சியின் மூலம் விரைவான சௌபாக்கியத்தை எட்ட வேண்டும். தாய் இறப்பு, குழந்தை இறப்பு அதிகரித்து, ஆயுட்காலம் குறைந்தால் 76 ஆண்டுகளின் சாபக்கேடு என கூறுவதில் நியாயம் காணலாம், ஆனால், திசைக்காட்டியினர் வாய்க்கு வந்தவாறு சபாம் என பொய்களை உரைத்து வருகின்றனர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

# "ரணிலுக்கு எதிராக விசாரணை"

ஊடகவியலாளர்களிடம் பேசிய வட்டகல, விக்ரமசிங்கேவின் சமீபத்திய அல் ஜசீரா நேர்காணலில் குறிப்பிடப்பட்ட பட்டலந்த அறிக்கை தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்க அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்றார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி மற்றும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் குறித்தும் விசாரணைகள் நடத்தப்படும் என்றும் அவர் கூறினார். இந்த இரண்டு சம்பவங்களும் விக்ரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் நடந்தவை.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெளிப்படைத்தன்மைக்கு உறுதி பூண்டுள்ளதாகவும், ரணில் முன்னதாக அரசியல் பாதுகாப்பால் ஸ்தம்பதிக்கச் செய்த அனைத்து குற்றச்சாட்டுகள் மீதும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் வட்டகல வலியுறுத்தினார்.

# இலங்கை கிரிக்கெட் வீரருக்கு பிணை



பின்னர் அவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டு, அடுத்த புதன்கிழமை (12) கெஸ்பேவ நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவுறுத்தப்பட்டார்.

முறைப்பாட்டாளரும் அண்டைய வீட்டார் என்றும், இலங்கை கிரிக்கெட் வீரர் அஷேன் பண்டார தனது காரை வீதியைத் தடுக்கும் வகையில் நிறுத்திய பின்னர் தகராறு ஏற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# "சொத்துக்கள் முடக்கப்படும்"



பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய ஏற்கெனவே வெளியிட்ட சுற்றறிக்கையின் கீழ், தேசபந்து தென்னகோனின் சொத்துக்களை முடக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

மோதரை பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதி அமைச்சர் சுனில் வட்டகல இதனைத் தெரிவித்தார்.

முன்னதாக, பொலிஸ் மா அதிபர் தென்னகோனை கைது செய்வதைத் தவிர்க்க உதவியதாகக் கண்டறியப்பட்ட எவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் கூறியிருந்தனர்.

தென்னகோனை கைது செய்வதற்கான வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது, மேலும் அவருக்கு உதவிய எந்தவொரு நபரும் சட்டரீதியான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்று அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில் தென்னகோன் நாட்டை விட்டு வெளியேறிவிட்டார் என்பதற்கான எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை, மேலும் அவர் வெளிநாடு தப்பிச் செல்வதைத் தடுக்க பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# சமலுக்கு 'குட்டி' ஆசை

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் நிகழ்வு தங்காலை கார்ல்டன் இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



"இவர்கள் விரும்பினால், நானும் அதைக் கேட்பேன்" என்று சமல் ராஜபக்ஷ கூறியபோது பலர் சிரித்தனர்.

அரசியல் கட்சிகள் தொடர்ந்து ஏற்ற இறக்கங்களுடன் சென்று வருவதாக சமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். அதன்படி, கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி வீழ்ச்சியடைந்து வந்ததாக அவர் கூறினார்.

# இருவரும் போதையில் உறக்கம்: 25 பேர் நிர்க்கதி

கல்கந்த பகுதிக்கு வேறு பேருந்துகள் இல்லாததால் பயணிகளுக்குக் கிடைத்த ஒரே பேருந்து இதுதான். இந்தப் பேருந்து வெலிகந்த நகரத்திலிருந்து கல்கந்த பகுதிக்கு பிற்பகல் 2:30 மணிக்குப் புறப்படத் திட்டமிடப்பட்டது.

பேருந்தின் சாரதியும் நடத்துநரும் குடிபோதையில் இருந்ததாகவும், ஏதோ ஒன்றைக் குடித்துவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்ததாகவும், இதன் விளைவாக, பயணிகள் அந்தப் பகுதிக்குச் செல்லவோ அல்லது வெலிகந்த நகரத்தை அடையவோ முடியாத நிலை ஏற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதன் பின்னர், மாணவர்கள் உட்பட 25 பேரை வெலிகந்த, கல்கந்த மற்றும் குடபொகுன பகுதிகளுக்கு வாடகை வண்டி மூலம் அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பேருந்து தற்போது வெலிகந்த பேருந்து நிறுத்தத்தில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், நடத்துநர் இன்னும் குடிபோதையில் கழிவறையில் படுத்துக் கொண்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்நிலையில் இவருக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுப்பதற்காக அவ்விருவரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொலன்னறுவை டிப்போ முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

# இருதரப்பு ரீதியான இணக்கம்

இந்த சந்திப்பின்போது, 2022ஆம் ஆண்டில் முகங்கொடுத்த பொருளாதார நெருக்கடியின் போது சர்வதேச நாணய நிதியம் வழங்கிய தொடர்ச்சியான ஒத்துழைப்பிற்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

பொருளாதார மறுசீரமைப்பை செயற்படுத்தல்,பேரண்ட பொருளாதார ஸ்திரத் தன்மையை வலுப்படுத்தல், ஆபத்திற்கு உள்ளாகக் கூடிய தரப்பினருக்கு உதவுதல் மற்றும் நிர்வாகத்தை வலுப்படுத்தல் உள்ளிட்ட துறைகளில் இலங்கை அடைந்திருக்கும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் தொடர்பில் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

கடன் மறுசீரமைப்பு செயன்முறையில் முகாமைத்துவ பணிப்பாளர், சிரேஷ்ட முகாமைத்துவம் உட்பட சர்வதேச நாணய நிதியத்தின் பணிக்குழுவினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பையும் ஜனாதிபதி இதன்போது பாராட்டினார்.

உலக பொருளாதார ஸ்திரமற்ற தன்மைக்கு மத்தியில் இலங்கையின் பொருளாதாரத்தை தாங்கிக்கொள்ளும் நிலையுடையதாக மாற்றுவதற்கு இந்த தொடர்ச்சியான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பேரண்ட பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தல் மற்றும் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் மூன்றாவது மீளாய்வை முழுமைப்படுத்தல் மற்றும் பிணைமுறி பரிமாற்றம் மற்றும் கடன் மறுசீரமைப்பை சாதகமான முறையில் நிறைவு செய்தமை தொடர்பில் ஜோர்ஜிவா ஜனாதிபதிக்கு வாழ்த்து கூறினார். முக்கிய மறுசீரமைப்பை முன்னெடுக்க இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு முகாமைத்துவ பணிப்பாளர் பாராட்டு தெரிவித்ததோடு, இலங்கையின் பொருளாதார நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்துழைப்பதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் அர்ப்பணிப்பையும் உறுதிப்படுத்தினார். குறிப்பாக உலக ஸ்திரமற்ற தன்மையின் உயர்வு, உலக பொருளாதார முன்னேற்றத்தின் மந்த நிலை மற்றும் உலக கடன் மட்டத்தின் உயர்விற்கு மத்தியில் நல்லாட்சி கட்டமைப்புடன் பேரண்ட பொருளாதார நியதிகளையும் வலுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை ஜோர்ஜிவா வலியுறுத்தினார்.

இலங்கை மக்களின் வலுவான ஆணையை பிரதிபலிக்கும் வகையில்,சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்துடன் முன்னோக்கிச் செல்வற்கும்,இணக்கம் காணப்பட்ட இலக்குகளை மக்களின் விருப்பத்துக்கு அமைய அடைந்துகொள்வதற்குமான தயார்நிலையை ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

அதற்காக வறியவர்களின் முன்னேற்றத்துக்குத் தேவையான பொறிமுறையை நடைமுறைப்படுத்தப்படுவதுடன், நலன்புரிச் செலவுகளை வலுப்படுத்தல் என்பனவே அரசாங்கம் முன்னுரிமை அளிக்கும் விடயங்களாக உள்ளன என்பதையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார். மின்சார துறை உள்ளிட்டவற்றில் சரியான நிர்வாகம் மற்றும் செலவு - மீளமைத்தல் விலை நிர்ணயத்தின் ஊடாக அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முனைவுகளை மேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார். கடன் அச்சுறுத்தலைக் குறைத்தல் மற்றும் நிலையான மற்றும் பேரண்ட அபிவிருத்தியை மேம்படுத்த பலதரப்பு கூட்டிணைவுகளின் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இதன்போது வலியுறுத்தினார்.

நீடிக்கப்பட்ட கடன் வசதி வேலைத்திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள மீளாய்வுகளைச் சாதகமாக நிறைவு செய்வதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை ஜனாதிபதி இதன்போது கிரிஸ்டலினா ஜோர்ஜிவாவிடம் உறுதிப்படுத்தினார்.

எதிர்காலத்தை பார்க்கும்போது, இலங்கையை நிலையான மற்றும் சமநிலையான அபிவிருத்தியை நோக்கி தீர்மானம் மிக்க வகையில் நகர்த்தும் வேலைத்திட்டத்தின் கீழ் மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலைப் பின்வாங்காமல் செயற்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜோர்ஜிவா இதன்போது வலியுறுத்தினார். குறிப்பாகத் தொழில்நுட்பம் மற்றும் உலக அரசியலின் துரித வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, நிலையான வகையில் மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பும் செயற்பாடுகளின் சவால் மிகுந்த தன்மையை அவர் ஏற்றுக்கொண்டதோடு, இலங்கையின் நிலையான பங்குதாரராகச் சர்வதேச நாணய நிதியத்தின் வகிபாகத்தையும் தெளிவுபடுத்தினார். அனைத்து துறைகளும் உள்ளடங்கும் அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தலுக்காக இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கச் சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்தும் தயாராக இருப்பதையும் கிரிஸ்டலினா உறுதிப்படுத்தினார்.

இலங்கை நிலைபேறான ஸ்திரத்தன்மையை அடைந்துகொள்வது தொடர்பான தொடர்ச்சியான கலந்துரையாடல் மற்றும் ஒத்துழைப்பின் அவசியம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் முகாமைத்துவ பணிப்பாளருக்கு இடையில் இதன்போது இருதரப்பு ரீதியான இணக்கம் எட்டப்பட்டது.

செழுமையான மற்றும் நிலையான எதிர்காலத்திற்காக ஒன்றிணைந்து செயற்படுதல் மற்றும் அன்னியோன்னியமாகச் செயற்பட வேண்டியதன் அவசியமும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

## மன்னாரில் சிறப்பு நிகழ்வு

இராணுவத்தின் 542ஆவது காலாட்படை பிரிவினரின் ஏற்பாட்டில், மன்னார் மற்றும் மடு வலய பாடசாலை மாணவிகள் பங்கேற்ற கலாசார நடன நிகழ்வு போட்டியானது, மன்னார் நகரசபை மண்டபத்தில் சனிக்கிழமை(08) இடம்பெற்றது.

இராணுவத்தின் 542ஆவது பிரிவு அதிகாரி மேஜர் விக்டர் பெர்னாண்டோ மற்றும் பிரிகேடியர் சந்திக்க அசுருசிங்கவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கலாச்சார நடனப் போட்டியில் 12 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவிகள் பங்கேற்றனர்.

குறித்த நிகழ்வில் மன்- புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவர்கள் முதலாம் இடத்தையும், மன்னார் டிலாசால் கல்லூரி நானாட்டான் மாணவிகள் இரண்டாம் இடத்தையும் திருக்கேதீஸ்வரம் மன்னார்–கௌரியம்பாள் தமிழ் மகா வித்தியாலய மாணவிகள் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்டத்தில் இரண்டு சிங்கள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவிகளின் கலாசார நடனங்களும் இடம்பெற்றன.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரிகேடியர் ஐ.பி.ஜயசிங்க, நானாட்டான் பிரதேச செயலாளர் சிவசம்பு, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வை.சந்திரபால, மேஜர் சிறிநாத் மற்றும் அழைக்கப்பட்ட விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

– றொசேரியன் லெம்பேட்














# “எனக்கும் ஜீவனுக்கும் பிரச்சினைகள் இல்லை”

■ எஸ்.சதீஷ்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், தொழிலாளர் தேசிய சங்கமும் இன்றுவரை மலையக மக்களுக்கு குரல் கொடுத்த அமைப்புகள் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் - செனன் கே.எம். தோட்டத்தில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை ஞாயிற்றுக்கிழமை(09) சந்தித்து அவர்களுக்கான நிவாரண பொருட்களை வழங்கி வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த பழனி திகாம்பரம், “கடந்த காலங்களிலும் மக்களுக்காகவே நாங்கள் இருதரப்பினரும் முரண்பட்டுக் கொண்டோம் தேசிய கட்சிகளுக்குக் கட்டுப்பாடு உள்ளது. அதை மீறிச் செயல்பட முடியாது. நாமும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் மக்களுக்குச் சேவைகளை முன்னெடுத்திருக்கின்றோம். ஆனால், புதிதாக வந்த கட்சிகள் மக்களுக்கு எதுவும் செய்ததில்லை.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில்



நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து போட்டியிடுவதற்குக் கலந்துரையாடிக் கொண்டிருக்கின்றோம்.

வெளி மாவட்டங்களில் தனித்துப் போட்டியிடப் பேசிக் கொண்டு இருக்கிறோம். எமது கட்சியில் எவ்வித பிளவுகளும் இல்லை நான் ராதாகிருஷ்ணன் மற்றும் மனோ கணேசன் ஆகியோர் இணைந்து தான் செயற்படுவோம் .

மலையகத்தை பொறுத்தவரையில் மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகப் பேசி வருகிறோம் எனக்கும் ஜீவன் தொண்டமானுக்கும் சொந்த பிரச்சினைகள் எதுவும் கிடையாது. எமது ஆட்சிக் காலத்தில் காணி உரிமை முதல் காணி உறுதிப்பத்திரம் வரை பெற்றுக் கொடுத்துள்ளோம். பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாய் பெற்றுத் தருவதாக ரணில் விக்ரமசிங்க கூறி, அது கிடைக்கவில்லை. ஒவ்வொரு முறையும் சம்பள பிரச்சினை இழுபறி நிலையில் உள்ளது. ஆகையால் தான் எமது நிலைப்பாடு பெருந்தோட்ட தொழிலாளர்களைச் சிறு தோட்ட உரிமையாளர்களாக மாற்றுவதே எமது நிலைப்படாக உள்ளது.

பொகவந்தலாவ, மஸ்கெலியா போன்ற தூர பிரதேசங்களில் உள்ள மக்களுக்குக் கடந்த காலங்களில் மிகத் தொலைவிலே பிரதேச செயலகங்கள் காணப்பட்டன. அதை இலகு படுத்துவதற்காகவே நாம் எமது அரசாங்கத்தில் பிரதேச செயலகங்கள் பிரதேச சபைகளையும் அதிகரித்தோம் . இந்த மக்கள் பிரதேச சபையினை கைப்பற்ற எமக்கு வாய்ப்பு வழங்கவில்லை. ஆனால், மக்கள் மாற்றத்தை எதிர் பார்த்துள்ளார்கள் இருந்தாலும் பொருத்திருந்து பார்ப்போம் என்றார்.

இந்த நிகழ்வில், தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதிநிதி செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் இளைஞர் அணி தலைவர் பா.சிவநேசன் பிரதி பொதுச் செயலாளர் கல்யாணகுமார் மற்றும் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

8 மாணவிகள் பாலியல் வன்புணர்வு:

## கணித ஆசிரியருக்கு விளக்கமறியல்

பத்தாம் வகுப்பில் படிக்கும் எட்டு மாணவிகளை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக சந்தேகத்தின் பேரில் கடந்த 7ஆம் திகதியன்று அரலகங்வில பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கணித ஆசிரியர், பொலன்னறுவை நீதவான் நீதிமன்றத்தில் 8ஆம் திகதி ஆஜர்படுத்தப்பட்டார், அவரை இந்த மாதம் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் சந்தியா கருணாரத்ன உத்தரவிட்டுள்ளார்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட கணித ஆசிரியரை மனநல மருத்துவரிடம் ஆஜர்படுத்த அனுமதியளிக்குமாறு பொலிஸார், நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர், அதன்படி, சிறை அதிகாரிகள் மூலம் அவரை மனநல மருத்துவரிடம் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுப்பதாக பொலிஸார். தெரிவிக்கின்றனர்.

திம்புலாகல கல்வி வலயத்தில் உள்ள அரலகங்வில கல்விப் பிரிவில் உள்ள ஒரு உயர்நிலைப் பாடசாலையில் பத்தாம் வகுப்பு படிக்கும் எட்டு மாணவிகள், தங்களைப் பலமுறை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக கூறி அளித்த புகாரைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட கணித ஆசிரியர் கடந்த 7 ஆம் திகதி அரலகங்வில பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாலியல் வன்புணர்வுக்கு ஆளானதாகக் கூறப்படும் மாணவிகளின் பெற்றோருக்கு நீதிமன்றப் படிவங்கள் வழங்கப்பட்ட பின்னர், மாணவிகள் தெஹியத்தகண்டிய மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக அரலகங்வில பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பிரதீப் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

## சிகரெட்டுகளுடன் இருவர் கைது

சுமார் 345,000 ரூபாய் மதிப்புள்ள வெளிநாட்டுத் தயாரிப்பு சிகரெட்டுகளை சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டு வந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வெளியே கொண்டு செல்ல முயன்ற இரண்டு பயணிகள், விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் அதிகாரிகளால் ஞாயிற்றுக்கிழமை (09) கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் கண்டி, குண்டசாலையைச் சேர்ந்த 32 வயதுடைய தனியார்த் துறை ஊழியர் ஆவார். அவர் சனிக்கிழமை (08) அன்று அதிகாலை 5.00 மணிக்கு ஸ்ரீலங்கன் எயார்ர்லைன்ஸ் விமானம் UL-226 மூலம் துபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்திருந்தார்.

மற்றொரு நபர் கண்டியைச் சேர்ந்த 50 வயதுடைய உடற்கட்டமைப்பு பயிற்றுவிப்பாளர் ஆவார், அவர் ஞாயிற்றுக்கிழமை (09) அன்று அதிகாலை 1.10 மணிக்கு துபாயிலிருந்து ‘பிளைடுபாய் FZ-569 ‘ விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தார்.இருவரும் தங்கள் பொருட்களில் மறைத்து வைத்து வெளிநாட்டுத் தயாரிப்புப் பொருட்களைக் கடத்தினர்.

23,000 “மான்செஸ்டர்” மற்றும் “பிளாட்டினம்” சிகரெட்டுகள் அடங்கிய 115 சிகரெட் அட்டைப்பெட்டிகளை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். இருவரும் தற்போது பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டு,எதிர்வரும் (12) அன்று நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## லிங்கேஸ்வரன் மீது பொலிஸ் தாக்குதல்

■ எஸ்.கீதபொன்கலன்



மூதூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுத் தாக்குதலுக்குள்ளான குமாரபுரத்தைச் சேர்ந்த நபர் மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

6 பிள்ளைகளின் தந்தையான நாகராசா லிங்கேஸ்வரன் (வயது 44) என்பவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மூதூர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, சனிக்கிழமை (08) பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், சிகிச்சைக்காக மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காகத் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

கிளிவெட்டி - குமாரபுரம் பகுதியில் பெப்ரவரி (24) அன்று ஏற்பட்ட விபத்துச் சம்பவத்துக்குப் பின்னர் இடம்பெற்ற வன்முறை சம்பவத்தில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வந்த குறித்த நபர் கடந்த வெள்ளிக்கிழமை (07) அன்று மூதூர் பொலிஸாரால் குமாரபுரம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

இதன்பின்னர் சட்டத்திற்கு முரணான வகையில் தனது கணவர் தாக்கப்பட்டு உள்ளதாகவும், தாக்கப்பட்ட கணவனுக்கு நீதி கோரியும் அவரது மனைவி திருகோணமலை பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். அதன் பின்னர் குறித்த அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டதுடன், மூதூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் கோரியுள்ளனர்.

பெப்ரவரி (24) அன்று குமாரபுரம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தின் பின்னர் ஏற்பட்ட கைகலப்பின் காரணமாக தெகிவத்தை பகுதியில் இருந்து 30க்கும் மேற்பட்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் தமது கிராமத்திற்குள் நுழைந்து தாக்குதல் மேற்கொண்டிருந்ததாகவும் இதன்போது தமது கிராமத்தைச் சேர்ந்தவர்களும் தற்பாதுகாப்பிற்காக திருப்பி தாக்கியதோடு தப்பியும் ஓடியதாக இது தொடர்பான விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## காணாமல் போன தாய் வீடு திரும்பவில்லை

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர்ப் பகுதியில் வசிக்கும் 3 பிள்ளைகளின் தாய் பெப்ரவரி 10 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக உறவினர்களால் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டின் பிரகாரம், சாய்ந்தமருது பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டுவருவதுடன், இது வரை எந்தவித தகவலும் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பெண் மூதூர் பகுதியைச் சேர்ந்த நபரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இப்பெண் தொடர்பில் ஏதாவது அறிந்திருந்தால் உடனடியாக கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு தெரியப்படுத்துமாறு



076 7824592, 075 3251281 கேட்கப்பட்டுள்ளது.

மேலும், பெண்ணை அழைத்துச் சென்ற நபர் கல்முனை உள்ளிட்ட புறநகர்ப் பகுதிகளில் ஐஸ்கிரீம் வியாபாரம் செய்பவர் என ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

## கூரையிலிருந்து விழுந்து ஒருவர் பலி

மீகஹகிவுல, பலகொல்ல பகுதியில் கூரையிலிருந்து கீழே விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் சனிக்கிழமை (08) இடம்பெற்றுள்ளதாக கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 69 வயதுடைய டி.எம்.சுகதபால என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர் கூரையில் வேலை செய்து கொண்டிருந்த நிலையில், மதியம் தேநீர் அருந்துவதற்காக சக ஊழியர்களுடன் கீழே இறங்கி, மீண்டும் கூரையில் ஏறி வேலை செய்து கொண்டிருந்த போது, திடீரென தவறி கீழே விழுந்துள்ளார்.

அவரை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்த போதும், அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளதுடன், இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## மண்டை ஓடு துண்டுகள் மீட்பு

மாவனெல்ல, ஹிங்குல் ஓயாவில் கருப்பு பொலித்தீன் பைகளில் இரண்டு மண்டை ஓடு துண்டுகள் மற்றும் பல உடல்களின் எலும்புத் துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக மாவனெல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர். உள்ளூர்வாசிகளிடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் இவை மீட்கப்பட்டுள்ளன.

ஹிங்குல் ஓயா பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் தனது தோட்டத்தில் இருந்து தேங்காய் எடுக்க ஓடையருகில் சென்றபோது, ஒரு பையைக் கண்டுள்ளார். பின்னர் அவர் அந்த பையை கத்தியால் குத்தியுள்ளார். பையில் மண்டை ஓடுகள் மற்றும் பல உடல்களின் பாகங்கள் இருப்பது தெரிந்த பின்னர் சம்பவம் குறித்து பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேவை

கொழும்பில் உள்ள சுற்றுலா விடுதியொன்றில் தங்கியிருந்து பணியாற்றுவதற்கு உடனடியாக வேலையாட்கள் (Room Boys) தேவை. தொடர்புக்கொள்ள - 077 1778068 , 076 8001124

# மாற்றுத்திறனாளி சமூகத்தினரை மதிக்க வேண்டும்

பொது போக்குவரத்து மட்டுமன்றி, பொது இடங்களிலும், மாற்றுத்திறனாளிகள் விசேட முன்னுரிமை வழங்கப்படுகிறது. பல நாடுகளில், மாற்றுத்திறனாளிகளுக்கு கூடுதலாக முன்னுரிமை வழங்கப்படும். எனினும், எமது நாட்டை பொறுத்தவரையில், அவர்களை சிலர் மதிப்பதே இல்லை. பாராளுமன்றத்திலும், அவ்வாறான நிலை ஒன்று அண்மையில் ஏற்பட்டிருந்தது.

பாராளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த வெறுமனே ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அல்ல. இலங்கையின் முதல் பார்வையற்ற பாராளுமன்ற உறுப்பினர் இவர்தான். "ஒருவரின் கைகளைப் பிடித்தால், யார் என்பதை தங்களுக்கு யூகிக்க முடியும். எனினும், அவருடைய இதயங்களில் என்ன? இருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியாது" என தனது உரையில் வருத்தமாகத் தெரிவித்திருந்தார்.

மாற்றுத்திறனாளி சமூகத்தை அவமதிக்கும் வகையில், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, மாற்றுத் திறனாளியான பாராளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்தவை நிந்திக்கும் வகையில், உரையாற்றியிருந்தார்.

இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 8.7% அல்லது கிட்டத்தட்ட 1.6 மில்லியன் மக்கள் 'ஊனமுற்ற சமூகம்' என்ற வகைக்குள் வருவதாகப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் டிசெம்பர் 3 ஆம் திகதி வருகிறது. இலங்கை 2006 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் தொடர்பான மாநாட்டில் கையெழுத்திட்டது.

மாற்றுத்திறனாளி சமூகம் என்பது சிறப்புத் தேவைகளைக் கொண்ட மக்களின் குழுவாகும். 'ஊனமுற்ற நபர்' என்பது, உடல் அல்லது மன திறன்களில் ஏதேனும் குறைபாட்டின் விளைவாக, பிறவியாகவோ அல்லது இல்லாமலோ, வாழ்க்கையின் அனைத்து தேவைகளையும் அல்லது ஒரு பகுதியையும் தனக்காகப் பூர்த்தி செய்ய முடியாத ஒரு நபரைக் குறிக்கிறது.

மாற்றுத்திறனாளி சமூகத்தின் சுயாட்சி உரிமைகளை உறுதிப்படுத்துதல் போதுமான வாழ்க்கைத் தரத்தையும் சமூக பாதுகாப்பையும் உறுதி செய்தல்; சுகாதார சேவைகளை உறுதி செய்தல்; அணுகக்கூடிய கட்டமைக்கப்பட்ட சூழல்களை உருவாக்குதல்; போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் உதவி தொழில்நுட்பத்தை உருவாக்குதல்; மாற்றுத்திறனாளிகளின் அதிகாரமளிப்புக்கான தேசிய செயலகம் வெளியிட்டுள்ள செயல்திறன் அறிக்கை, தகவல் மற்றும் தகவல் தொடர்புக்கான அணுகலை உறுதி செய்ய வேண்டும்

ஒரு நாகரிக சமூகத்தில், இத்தகைய குறைபாடுகள் உள்ள ஒரு சமூகத்தை வாய்மொழியாகவோ அல்லது மன ரீதியாகவோ துஷ்பிரயோகம் செய்யவோ, வன்முறை செய்யவோ அல்லது துஷ்பிரயோகம் செய்யவோ கூடாது என்பது ஒரு நடைமுறையாக இருக்க வேண்டும். கட்டிடங்கள் கட்டும் போது மாற்றுத்திறனாளி சமூகத்தினருக்கான சிறப்பு அணுகல் சாலைகள், பொது இடங்களில் சிறப்புக் கழிப்பறைகள், சிறப்புக் கல்வி முறைகள் மற்றும் சமூக நடவடிக்கைகளில் முன்னுரிமை ஆகியவை அவர்களுக்கு முன்னுரிமை மற்றும் மரியாதை அளிக்கும் வகையில் மேற்கொள்ளப்படுகின்றன.

சலுகைகள் குறைந்த மாற்றுத்திறனாளி சமூகத்தினர் இந்த சமுகத்தின் சம உறுப்பினர்களாகக் கருதப்பட்டு அவர்களுக்கு உரிய சமூகப் பொறுப்பு வழங்கப்பட வேண்டும்; அதற்கான சமூக சூழல் உருவாக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# ரணிலைத் தூற்றுவது சரிதானா?

லக்ஸ்மன்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் அல்-ஜசீராவின் ஊடகவியலாளர் மெஹ்தி ஹசன் கேட்ட கேள்விகளும் அவர் கொடுத்த பதில்களும் உலகளவில் பல விமர்சனங்களை தோற்றுவித்திருக்கிறது. அதற்கெதிரான விமர்சனங்களாக ரணிலிடம் கேள்வி கேட்பது போன்று காஸா, மியன்மார், காஷ்மீர் பிரச்சினைகள் பற்றி டிரம்ப், புட்டின், மோடி, நெத்தன்யாகு போன்றவர்களிடம் கேள்விகளைக் கேட்க முடியுமா என்ற வகையிலான கருத்துக்களும் வந்த வண்ணமிருக்கின்றன. இது போலவே டி.டப்ளியு. தொலைக்காட்சிக்கு அவர் கொடுத்திருந்த நேர்காணலும் விமர்சனங்களைக் கொண்டுவந்திருந்தது.

உலகில் அரசியல்வாதிகள் தங்களுக்குக் கிடைக்கின்ற வாய்ப்புக்களை மிகச் சரியாகப் பயன்படுத்துகின்றார்களா என்றால், அது கேள்விக்குறிகளையே தோற்றுவிக்கும். அது இலங்கைக்கு மாத்திரமல்ல அனைத்து நாடுகளுக்கும் இது பொதுவானதாகவே இருக்கும்.

ஆட்சியிலிருந்த அரசியல்வாதிகள் யாரும் அவர்களுடைய ஆட்சிக் காலங்களில் மக்கள் எதிர்பார்த்த விடயங்களை செய்து முடித்திருக்கிறார்களா என்றால் இல்லை என்றே பதில் கிடைக்கும். அதனை நிரூபிப்பதாகவே ஒவ்வொருவருடைய ஆட்சிக்காலங்களின் பின் ஏற்பட்ட மாற்றங்களே சாட்சியாக இருக்கிறது. அதற்கு அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், பிரான்ஸ், ஜேர்மன் என பல நாடுகளை உதாரணமும் காட்டலாம்.

இலங்கையில் இனப்பிரச்சினை தோற்றம் பெற்றதிலிருந்து பல்வேறு அரசியல் தலைவர்கள் தங்களது திட்டமிட்ட செயற்பாடுகளை மேற்கொண்டே வந்திருக்கிறார்கள். நாட்டுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டதன் பின்னர் தமிழர்கள் தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக அக்காலங்களில் உருவான தமிழ் அரசியல்வாதிகளுக்குத் தங்களுடைய ஆதரவுகளை வழங்கினார்கள். ஆனால், ஆட்சியிலிருந்து சிங்களத் தலைவர்கள் யாரும் அந்த அரசியல்வாதிகளின் முயற்சிகளுக்குத் தீர்வை முன்வைக்கவேயில்லை. முன்வைத்தாலும் அவை சிங்கள அடிப்படைவாதிகளால் இல்லாமலாக்கப்பட்டன.

அதற்கு டட்லி-செல்வா ஒப்பந்தம், பண்டா செல்வா ஒப்பந்தம், சந்திரிகா அம்மையாரின் இடைக்கால நிருவாக சபை, சுனாமி நிவாரணத் திட்டம், மைத்திரிபால சிறிசேன கால புதிய அரசியலமைப்பு உருவாக்கம் போன்றவற்றை அதற்கு உதாரணமும் காட்டலாம். ஏன்? இந்தியாவின் முழுமையான பங்குபற்றலுடன் ஏற்படுத்தப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம், அதனால், உருவான 13ஆவது திருத்தத்தையும் கூறலாம். 13ஆவது திருத்தம் இதுவரையில் முழுமையாக அமுல்படுத்தப்படாமலிருப்பதும் மாகாண சபைகளுக்கான அதிகாரத்தை ஆளுநர்கள் வசம் வைத்திருக்கின்றமை வேறுகதை.

அகிம்சை வழிப் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது ஒருமித்து இருந்த தமிழ் அரசியல் தலைவர்கள் பிரிவுகளாக மாறத் தொடங்கினார்கள். அதற்கு ஒவ்வொருவரும் கைக்கொண்ட கொள்கைகள் காரணமாக இருந்தன. ஒருவர் ஒருவழியை முன்வைக்க மற்றையவர்கள் வேறு ஒரு முறையையே கையாண்டிருக்கின்றனர். எவ்வாறிருந்தபோதிலும், தமிழ் மக்களின் சுதந்திரமான அரசியல் உரிமைக்கான சுய நிர்ணயக் கோரிக்கைக்கு ஏற்ற தீர்வு வழங்கப்படவில்லை. அது தமிழ் அரசியல் தலைவர்கள் மீதான விமர்சனங்களையே ஏற்படுத்தியிருந்தது. இப்போதும் அவ்வாறான விமர்சனங்கள் இருந்துகொண்டே இருக்கிறது. கடந்த தேர்தல்களில் தமிழ் மக்கள் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பக்கம் சாய்வதற்கு அதுவும் ஒரு காரணமாகும்.

அரசியல் ரீதியான முயற்சிகளின் இயலாமை காரணமாகவே ஆயுதப் போராட்டம் தோற்றம் பெற்றது. அந்த ஆயுதப் போராட்டத்தின் வளர்ச்சி ஆட்சியிலிருந்த அரசியல் தலைவர்கள் அனைவரையும் அச்சம் கொள்ள வைத்திருந்தது என்பதற்கப்பால் பிரமிக்கவும் செய்திருந்தது. பிற்காலத்தில் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் பயங்கரவாதப் போராட்டமாகக் காண்பிக்கப்பட்டு இறுதியில் ஆயுத ரீதியாகவே அடக்கப்பட்டது.

இலங்கையை பொறுத்தவரையில், தமிழ் மக்களது போராட்டமானது ஒட்டு மொத்த சிங்கள மக்களுக்கு எதிரான போராட்டமாகக் காண்பிக்கப்பட்டு திசை திருப்பப்பட்டு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இறுதி யுத்தத்தின் பின்னர் ஏதோ தமிழர்களுடைய போராட்டத்தை ஒட்டுமொத்தமாக முடிவுக்குக் கொண்டுவந்தவர்கள் மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினரே என்றும் சொல்லப்பட்டது. அதனால்தான் இலங்கையின் ஏகபோக ராஜாவாக மகிந்த புகழாரம் சூடப்பட்டிருந்தார். ஆனால், சிறிது காலத்திலேயே அவர்கள் ஒன்றுமே இல்லாதவர்களாக அரசியலிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கின்றனர். இறுதியில் தேசியப் பட்டியல் ஊடாக மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தின் வாரிசான நாமல் ராஜபக்ஷ பாராளுமன்றத்துக்குள் நுழைய வேண்டிய நிலையையும் கொண்டுவந்தது, இது சிங்கள மக்கள் தங்களுக்கிருந்த நீண்டகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த மகிந்த தரப்பினரையே மக்கள் ஒதுக்கியதையே காட்டுகிறது.

ஒருவகையில் பார்த்தால், உலகமே பிரமிக்கும் அளவிற்கு வளர்ச்சியடைந்திருந்த தமிழீழ விடுதலைப் புலிகளை இல்லாமல் செய்வதற்காக மிகவும் கவனமாகக் காய் நகர்த்தி நோர்வேயின் உதவியுடன் சமாதான ஒப்பந்தத்தினை மேற்கொண்டு அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பல வேலைப்பாடுகள் காரணமாகப் புலிகளுக்குள் பிளவை ஏற்படுத்தியவர் ரணில் விக்ரமசிங்க ஆவார்.

அவரது அந்த தந்திரமான கனகச்சிதமான வேலைப்பாடு ஆயுத ரீதியாக புலிகள் பலமிழக்கும் நிலையை ஏற்படுத்தியது. விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் மிகப்பெரும் பங்களிப்பைச் செய்துவந்த கிழக்கு மாகாணம், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களின் பங்களிப்பு குறைவதற்கு அல்லது இல்லாமல் போவதற்கு புலிகளின் பிளவு காரணமாக இருந்தது. அதனைச் செய்து முடித்தவர் ரணில் விக்ரமசிங்க ஆகும்.

ஆயுதப் போராட்டத்தின் முடிவு, அதனால் ஏற்பட்ட நாட்டின் அமைதி நிலை, இயல்பு வாழ்க்கை போன்றவற்றின் பின்னரே சிங்கள மக்கள் தங்களது மற்றைய விடயங்களைப் பற்றி சிந்திப்பதற்கான காலத்தைக் கொடுத்திருந்தது. அதற்காக ரணிலுக்கு முன்னர் ஆட்சியிலிருந்த தலைவர்கள் தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தின் வீழ்ச்சிக்கு, விடுதலைப் புலிகளின் அழிவுக்குப் பங்களிப்புச் செய்யவில்லை என்ற கருத்தாகாது என்பதும் இதில் கவனிக்கப்படவேண்டியது.

இந்த இடத்தில்தான், அல்-ஜசீராவின் சமீபத்திய நேர்காணலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதிலளிப்பதில் சிரமங்களை எதிர்கொண்டதாக சிலர் கூறுகின்றனர். அதே நேரத்தில், பத்திரிகையாளர் புலனாய்வு அதிகாரி போல் கேள்விகளை அடுக்கிக் கொண்டேயிருந்தார். ரணில் பதிலளிக்க நேரம் கொடுக்காமல் கதைத்து கொண்டிருந்தார். பதிலளிக்கும் நேரத்தில் இடைஞ்சல் செய்து கொண்டே இருந்தார் என்பதெல்லாம் ஒருவகையில் பார்த்தால், ரணில் ஒரு குற்றவாளியைப் போல் நடத்தப்பட்டார் என்பதாகக் கொள்ளலாம். உண்மையில் அவர் குற்றவாளியல்ல. இலங்கையின் பெரும்பான்மை சிங்கள மக்கள் விரும்பியதை ஏற்படுத்த அவருடைய ஆட்சி, அதிகார காலங்களில் அவர் முயற்சியைச் செய்திருந்தார்.


ரணிலைப் பொறுத்தவரையில், இலங்கையை உலகமயமாக்கலின் சூழலுக்கேற்பவும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்பவும் நகர்த்தியே வந்திருக்கிறார். நாட்டில் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் மக்கள் எதிர்பார்த்த ஆட்சியொன்றை மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கி நிறைவேற்ற முன்னின்றார். அதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர உள்ளிட்ட பலர் இணைந்தே இருந்தனர்.

ஆனால், அந்த முயற்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வருகையாலும், கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாகி, சிறிலங்கா பொதுஜன பெரமுன ஆட்சிக்கு வந்ததால் கைகூடாமல் போனது. அந்த ஆட்சி முடிவுக்கு வருவதற்கு மக்கள் எதிர்பார்க்காத விடயமான இயற்கை விவசாய முறை அறிமுகம் காரணமாக இருந்தது. மகிந்த குடும்பத்தாருக்கு அரசியலே வேண்டாமென்று ஒதுங்கவேண்டிய நிலையையும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை கலைத்து விட வேண்டும் என்று சிந்திக்கும் அளவிற்கு தற்போதைய நிலையையும் கொண்டுவந்திருக்கிறது.

இருந்தாலும், அந்நேரத்தில் கிடைத்த ஒரு வாய்ப்பினை பயன்படுத்தி மக்கள் எதிர்பார்க்கின்ற இலங்கையை ஏற்படுத்தவே ரணில் விக்கரமசிங்க முயற்சியை மேற்கொண்டார். அக்காலத்தில் அவர் மேற்கொண்டிருந்த பிரயத்தனங்கள் சாதாரணமானவையல்ல. பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்திருந்த இலங்கையை சர்வதேச அளவில் தூக்கி நிறுத்திவிடவேண்டும் என்றே அவர் அத்தனை முயற்சிகளையும் மேற்கொண்டார். ஓரளவிற்கு அதில் வெற்றியும் கண்டார். அதனாலேயே அவர் இப்போதும் விமர்சிக்கப்படுகின்றார் என்றே சொல்லாம். ஒருவகையில் நாட்டில் நீண்டகாலமாக நடைபெற்றுவந்த, இலங்கையின் தேசிய செல்வத்தை அழித்து கொண்டிருந்த யுத்தத்தை நிறுத்தி அமைதியை ஏற்படுத்திய மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினரையே ஒன்றுமில்லை என்றாக்கிய மக்கள் ரணில் விக்ரமசிங்கவை மிகச் சாதாரணமாகவே பார்ப்பர் என்பதில் தவறொன்றும் இருக்கப் போவதில்லை என்றே சொல்லாம்.

ஒரு அரச தலைவர் தன்னுடைய அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் நாட்டினதும் மக்களினதும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளும் முயற்சிகள் விமர்சிக்கப்படுவதில் தவறொன்றுமில்லை. இருந்தாலும் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் தேவையற்ற விடயங்கள் அரசியல் நாகரீகமற்றதாகவே பார்க்கப்படவேண்டும். அந்தவகையிலேயே, ரணில் விக்ரமசிங்க மீது மேற்கொள்ளப்படும் அழுத்தங்கள் அவரை ஒன்றும் செய்து விடப் போவதில்ல' என்பதுடன், இலங்கை அரசியலில் எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும் என்றே கொள்ளலாம்.

அதே நேரத்தில், தமிழ் மக்களின் விடயத்தில் அவர்களுடைய சுயநிர்ணய உரிமைகளுக்கான போராட்டம் மக்கள் விடுதலை முன்னணியைத் தலைமையாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியிலும், வேறு ஒரு கோணத்தில் அணுகப்படாமலிருப்பதும் இதுபோன்றதொரு நிலையே என்பதும் மறைப்பதற்கில்லை.



## வாழ்வியல் தரிசனம்

கெட்டவர்களிடம் உதவிகளைக் கோராதீர்கள். இவர்கள் உதவி செய்தால், அதற்கு ஒரு விலை வைப்பார்கள். இதை உடனே சொல்ல மாட்டார்கள். பின்னர், அமைதியாக உதவி கேட்டவர்களிடம் தங்களது சுயரூபத்தைக் காட்டுவார்கள்.

ஏமாற்றுவது பலருக்கும் சுகமானது. வேறு வழிகள் இன்றி உதவி கேட்டு வரும் அப்பாவிகளிடம் உடுத்தியிருக்கும் துணியையும் உருவி விடுவார்கள். இவர்கள் மெல்ல வதைக்கும் கிருமிகள். வறியவர்கள் மனம் துடிக்க வேண்டியுள்ளது.

வாழ்க்கை ஒரு போராட்டம் என பயந்தால், துணிச்சல் துளிகூட வரமாட்டாது. பயப்படுவதுகூட இயலாமையை வெளிப்படுத்துகின்றது.

நிமிர்ந்து நின்றால் சோகம் உடைபடும்.

மனிதனின் எழுச்சியை முடக்க முடியாது. இவை யாவரினதும் உள்ளத்திலும் இருக்கின்றது. தகுந்த நேரத்தில் வெளிப்படும்.

தட்டி எழுப்புவது யாவரினதும் பெரும் கடமை. நீண்ட உறக்கம் சோகத்தின் நண்பராகின்றது.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### "சிவனொளிபாத மலை சுற்றுச்சூழலுக்கு பெரும் பாதிப்பு"

சிவனொளிபாத மலைக்கு யாத்திரையை மேற்கொள்ளும் உள்ளூர் யாத்திரிகர்கள் ஊசி மலைப் பகுதியில் விட்டுச் செல்லும் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் பொலித்தீன்களால் அப் பகுதியில் சுற்றுச்சூழலுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றன.

யாத்திரிகர்கள் ஊசி மலைப் பகுதியில் தங்களது நேர்த்திக் கடன்களை முடித்து விட்டுக் கொடு பாக்கெட்டுகளில் உள்ள பொலித்தீன் உறைகள் மற்றும் ஊசிகள், அவ்விடத்திலேயே விட்டுச் செல்வதாகக் குறித்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


ஊசி மலைப் பகுதி மற்றும் சிவனொளிபாத மலைக்குச் செல்லும் வீதியில் மக்காத திடக்கழிவுகளை விட்டுச் செல்ல வேண்டாம் என்றும் இதனால் மிகப்பெரிய சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் சிவனொளிபாத மலைக்கு யாத்திரை மேற்கொள்ளும் யாத்திரிகர்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு குறித்த அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– காமினி பண்டார இளங்கந்தில

## அதிகரித்து வரும் யானை–மனித மோதல்

# உயிருக்கான போர்க்களம்



அடர்ந்த காடுகள் மற்றும் பரந்த வயல்வெளிகளின் மத்தியில், மிகப்பெரிய போராட்டமொன்று இடம்பெற்றுக்கொண்டுள்ளது. இது உயிர் வாழ்விற்கும் சகவாழ்விற்கும் இடையிலான போராட்டமாகும். மனித விரிவாக்கம் மற்றும் நில அபகரிப்பு, வாழ்வியல் காரணங்களினால், யானைகளின் வாழ்விடங்களை மற்றும் அவற்றின் பண்டைய பாதைகளை ஆக்கிரமிப்பதால் அவை விளிம்பிற்குத் தள்ளப்படுகின்றன. ஒரு காலத்தில் மனிதர்களால் போற்றப்பட்ட அவை, இப்போது விவசாயிகள் மற்றும் சமூகங்கள் தமது வாழ்விடங்களையும் வாழ்வாதாரங்களையும் பாதுகாக்கப் போராடும் போராட்டத்தை எதிர்கொள்கின்றன. ஆனால் இது உண்மையிலேயே ஒரு மோதலா, அல்லது இயற்கையும் மனிதகுலமும் இணைந்து செழிக்க ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டிய உலகில் சமநிலைக்கான கூக்குரலா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

சமீப நாட்களாகக் காட்டு யானைகளின் உயிரிழப்புகள் தொடர்பில் பல்வேறு செய்திகள் வெளியாகிய வண்ணம் உள்ளன. இந்நிலையில், இலங்கையின் வனப்பகுதிகளில் யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதல் நாளுக்கு நாள் தீவிரமடைவதுடன், இது இரு தரப்பிலும் பேரழிவு தரும் இழப்புகளுக்கும் வழிவகுத்துள்ளன. குறிப்பாக கடந்த 2019ஆம் ஆண்டு முதல் 2024 வரையிலான கடந்த ஆறு ஆண்டுகளில், யானை–மனித மோதல்களால் இலங்கையில் 2,425 காட்டு யானைகளும் 961 பொதுமக்களும் உயிரிழந்துள்ளதாக வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் சமீபத்திய அறிக்கைகளில் அவதானிக்க முடிகின்றது. இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் மாத்திரம் 43 காட்டுயானைகளும், மூன்று மனிதர்கள் உயிரிழந்துள்ளதாகவும் அந்தத் தரவுகள் வெளிப்படுத்துகின்றன.


கடந்த காலத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் இந்த காட்டு யானைகள்– மனித மோதல்கள் மற்றும் உயிரிழப்புகளைக் கருத்தில் கொண்டு இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் FactSeeker இனால் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்திடம், தகவல் அறியும் சட்டத்தைப் பயன்படுத்தி எழுத்து மூலம் தகவல் கோரப்பட்டது.

அவ்வாறு பெற்றுக்கொண்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்ததை அடுத்து, FactSeeker இத்தகவல்களை வெளிப்படுத்துகின்றது.

இந்த காலகட்டத்தில் அதிகமான மனித உயிரிழப்புகள் அநுராதபுரம் மாவட்டத்தில் பதிவாகியுள்ளன. இதன்போது 185 பேர் அநுராதபுரம் மாவட்டத்தில் உயிரிழந்துள்ளதாக வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன. அதேபோல் கடந்த ஆறு ஆண்டுகளில் அதிகமான காட்டுயானைகளின் உயிரிழப்புகள் 2023ஆம் ஆண்டு பதிவாகியுள்ளன. அவ்வாண்டு 488 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன. வனப்பகுதி அடிப்படையில் கணக்கெடுப்பை முன்னெடுத்துள்ள நிலையில், கடந்த ஆறு ஆண்டுகளில் அதிகமான காட்டு யானை உயிரிழப்புகள் பொலன்னறுவை வனப்பகுதிகளில் பதிவாகியுள்ளன.அப்பகுதிகளில் 487 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன.


இவ்வாறு கொல்லப்பட்டுள்ள காட்டு யானைகள் முக்கியமாக, துப்பாக்கிச் சூடு, மின்சாரக் கம்பி தாக்குதல் மற்றும் பட்டாஸ் மூலமான தாக்குதல் போன்ற காரணங்களால் அதிகமான காட்டு யானைகள் உயிரிழக்கின்றன. 2019 முதல் 2024 வரையிலான ஆறு ஆண்டுகளில், துப்பாக்கிச் சூட்டால் 409 யானைகளும், பட்டாஸ் தாக்குதல் மூலம் 356 யானைகளும், மின்சாரக் கம்பி தாக்குதலில் 316 யானைகளும் உயிரிழந்துள்ளன. மேலும், அதிகமான சொத்து சேதங்களும் பொலன்னறுவை மாவட்டத்திலேயே இடம்பெற்றுள்ளன. 2024ஆம் ஆண்டில் மாத்திரம் மனித–யானை மோதலால் 3,756 பேர் சொத்து சேதங்களைச் சந்தித்துள்ளனர். இது கடந்த ஆறு ஆண்டுகளில் பதிவாகியுள்ள மிக அதிகமான சொத்து சேதங்களாகும்.


இலங்கையின் யானைகளின் உயிர்வாழ்வு கொள்கைகள் மற்றும் உத்திகளைக் கையாள்வதில் மட்டுமல்ல, சமூகத்தின் அனைத்துத் துறைகளின் கூட்டு முயற்சியைகளிலும் சார்ந்துள்ளது. மனிதர்களும் யானைகளும் முரண்பாடுகளின்றி செழித்து வளரக்கூடிய ஒரு எதிர்காலத்தை உருவாக்க, பாதுகாவலர்கள்,அதிகாரிகள் மற்றும் உள்ளூர் சமூகங்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும், இந்த அற்புதமான உயிரினங்கள் வரும் தலைமுறைகளுக்கு நமது நிலப்பரப்புகளில் தொடர்ந்து சுற்றித் திரிவதை உறுதி செய்ய வேண்டும்.













# ஜப்பான் இலங்கையுடனான கடன் மறுசீரமைப்பு பூர்த்தி



இலங்கைக்கும், ஜப்பானுக்குமிடையிலான கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்யும் வகையில், இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ அகியோ இசொமதா மற்றும் இலங்கையின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சகத்தின் செயலாளர் கே.எம்.மஹிந்த சிறிவர்தன ஆகியோர் இருதரப்பு கடன் மறுசீரமைப்பு ஆவணத்தை பரிமாறிக்கொண்டனர். இதைத் தொடர்ந்து ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (JICA) இலங்கை அலுவலகத்தின் தலைமைப் பிரதிநிதி டெட்சுயா யமடா மற்றும் செயலாளர் சிறிவர்தனா இடையே திருத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

கடந்த ஆண்டு ஜூலை மாதம், அதிகாரப்பூர்வ கடன் வழங்குநர் குழு (OCC) உறுப்பினர்களுக்கும் இலங்கைக்கும் இடையே கடன் மறுசீரமைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) கையெழுத்தானது, அதன் பிறகு ஜப்பான் அரசாங்கம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய முனைய விரிவாக்கத் திட்டம் போன்ற நடந்து கொண்டிருக்கும் யென் கடன் திட்டங்களுக்கான பணத்தை மீண்டும் வழங்கியது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில், இன்று கையெழுத்திடப்பட்ட இருதரப்பு ஒப்பந்தம், ஜப்பானிய ODA திட்டங்களுக்கான நிலுவையில் உள்ள கடன்களின் திருப்பிச் செலுத்தும் விதிமுறைகளை திருத்துகிறது. இருதரப்பு ஒப்பந்தம் கையொப்பமிடுதல், இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான பொதுக் கடன் மறுசீரமைப்பை அதிகாரப்பூர்வமாக முடிவுக்குக் கொண்டுவருகிறது. கடன் மறுசீரமைப்பு குறித்த இருதரப்பு ஒப்பந்தத்தை முடித்த OCC உறுப்பினர்களில் ஜப்பான் முதன்மையானது.

இந்த ஒப்பந்தத்தின் கையெழுத்திடல் காலம் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் முன்னேற்றத்தில் ஒரு முக்கியமான மைல்கல் மட்டுமல்ல, இலங்கையின் பொருளாதாரத்தின் மறுமலர்ச்சியை வலுவாக ஆதரிப்பதற்கான ஒரு முக்கியமான வாய்ப்பாகும் என்று தூதுவர் இசொமதா தனது கருத்துக்களில் எடுத்துரைத்தார். இலங்கை மற்ற கடன் வழங்குநர்களுடனான அனைத்து கடன் மறுசீரமைப்பையும் விரைவில் முடித்து, மேலும் வளர்ச்சிப் பாதையில் சீராக முன்னேறும் என்று ஜப்பான் நம்புவதாகவும் அவர் கூறினார்.

இலங்கை அதன் நிலையான வளர்ச்சியை அடைவதற்கு அவசியமான சர்வதேச சமூகத்தில் இலங்கையின் நம்பகத்தன்மையை மீட்டெடுப்பதன் முக்கியத்துவத்தையும் தூதுவர் இசொமதா எடுத்துரைத்தார். இந்த நோக்கத்திற்காக இலங்கையின் பல்வேறு முயற்சிகளை ஆதரிப்பதற்கான ஜப்பானின் உறுதியான உறுதிப்பாட்டை அவர் மேலும் உறுதிப்படுத்தினார்.

பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த உறுதியான முடிவுகளை வழங்குவதற்காக, உறுதியளிக்கப்பட்ட அனைத்து திட்டங்களையும் முடிந்தவரை சீராக செயல்படுத்துவதற்கு JICA தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று JICA தலைமைப் பிரதிநிதி யமடா மீண்டும் வலியுறுத்தினார்.

ஊழல் எதிர்ப்பு, பொது நிதி மேலாண்மை மற்றும் மின்சாரத் துறை சீர்திருத்தம் போன்ற முக்கியமான துறைகளில் இலங்கையின் வலுவான சீர்திருத்த நடவடிக்கைகளை ஆதரிப்பதற்காக தொழில்நுட்ப உதவிக்கு JICA தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருவதாகவும் யமடா கூறினார்.

இந்தியப் பெருங்கடலில் ஒரு மூலோபாயப் புள்ளியில் அமைந்துள்ள இலங்கையின் வளர்ச்சி, முழு இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்புக்கு அவசியமானது. இலங்கையின் நிலையான வளர்ச்சிக்கு மேலும் பங்களிக்க ஜப்பான் விரும்புகிறது.

# கொமர்ஷல் வங்கியின் விவசாய நவீனமயமாக்கல் கிராமத்திட்டம்





கிளிநொச்சியில் உள்ள மகிழங்காட்டில் கொமர்ஷல் வங்கி முன்னெடுத்திருந்த தனது முன்னோடி திட்டமான "விவசாய நவீனமயமாக்கல்" இன் அறுவடை விழாவில் பங்கேற்று இத்திட்டத்தின் வெற்றியைக் கொண்டாடியது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள மகிழங்காடு, நாட்டில் உள்ள அனைத்து விவசாய சாத்தியக்கூறுகளையும் உள்ளடக்கி, விவசாயத் துறையில் தொழில்நுட்பத்தைப் பிரசாரம் செய்வதற்காக வங்கியால் ஆரம்பிக்கப்பட்ட முன்மாதிரியான கிராமமாகும்.

மகிழங்காட்டில் நடைபெற்ற அறுவடை நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர்  தனிப்பட்ட வங்கியியல் திரு திலக்ஷன் ஹெட்டியாராச்சி தலைமையிலான குழுவினர் கலந்துகொண்டனர், இதில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கே.பகீரதன், மத்திய வங்கியின் வடபிராந்திய பிராந்திய முகாமையாளர் திருமதி எஸ்.பஹீரதி மற்றும் கமநல சேவைகள் உதவி ஆணையாளர் பி.தேவதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் சிறப்பம்சமாக, சிறந்த அறுவடைக்கான ஊக்க எழுச்சிகளை போற்றும் பாரம்பரிய சடங்குகள், நிகழ்ச்சியின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட சில நவீன அறுவடை நுட்பங்களின் செயல்விளக்கம், மற்றைய பகுதிகளுக்கு முன்மாதிரியாக இத்திட்டத்தை மேற்கொள்வதிலுள்ள முன்னேற்றம் மற்றும் திறன் குறித்து முக்கிய பங்குதாரர்களின் உரைகள், இத்திட்டம் எவ்வாறு விவசாயிகளின் நடைமுறைகள் மற்றும் வருமானங்களை சாதகமாக மாற்றியுள்ளது என்பதற்கான விவசாயிகளின் கருத்துரைகள் என்பன இடம்பெற்றதுடன் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்திற்கு அதன் சமூகப் பயிற்சித் திட்டங்களில் பயன்படுத்துவதற்காக பன்முக வெட்டும் இயந்திரம் நன்கொடையாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், உரையாற்றிய கொமர்ஷல் வங்கியின் பிரதிப்பொது முகாமையாளர் "தனிப்பட்ட வங்கியியல் திலக்ஷன் ஹெட்டியாராய்ச்சி, இலங்கையில் விவசாயம் என்பது ஒரு தொழில் மட்டுமல்ல, அது நமது தேசத்தின் இதயத் துடிப்பாகும். புதுமை, ஒற்றுமை மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றின் மூலம், நமது விவசாயிகளுக்கு அதிகாரம் அளிக்கவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், எதிர்கால தலைமுறைக்கு வளமான எதிர்காலத்தைப் பாதுகாக்கவும் முடியும். கொமர்ஷல் வங்கியின் விவசாய நவீனமயமாக்கல் கிராமத் திட்டம் விவசாயத் துறையில் புரட்சியை ஏற்படுத்தும் என்பதுடன், அடுத்த தலைமுறையினரை ஸ்மார்ட் விவசாய நடைமுறைகளைத் தழுவுவதற்குத் தூண்டும் என்பதும் கொமர்ஷல் வங்கியின் நம்பிக்கையாகும்" என்றார்.

# சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள்...

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நாடளாவிய ரீதியில் சனிக்கிழமை(08) அன்று பல நிகழ்வுகள் மற்றும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

– தமிழ்மிரர் நிருபர்கள்

## கொழும்பில் Ride Colombo 25



சர்வதேச மகளிர் தினமான சனிக்கிழமை (08) துவிச்சக்கர வண்டியின் சக்தியால் மகளிர் பலப்படுத்தல் எனும் தொனிப்பொருளில் Ride Colombo 25 இடம்பெற்றது. கொழும்பு காலிமுகத்திடலில் இருந்து பம்பலப்பிட்டி வரை 200க்கும் மேற்பட்ட மகளிர்கள் இதில் கலந்துகொண்டனர்.

“Ride Colombo 25 துவிச்சக்கர வண்டியின் சக்தியால் மகளிர் பலப்படுத்தல், உலகம் முழுவதும் உள்ள மகளிர் முன்னேற்றம், ஒற்றுமை மற்றும் உற்சாகம் நிறைந்த வாழ்க்கையை ஊக்குவிக்கும் ஓர் இயக்கமாகும். பீல் லங்கா மற்றும் அக்ரோஸ் சிலோன் இணைந்து திட்டமிட்டு நடத்தும் இந்த நிகழ்வு மகளிர் சமத்துவம், தலைமைத்துவம் மற்றும் நிலைபேறான சுற்றுலாத்துறை ஊக்குவிக்கிறது” என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



## கல்முனை



## மட்டக்களப்பு



## மண்முனையில்...



## யாழ்ப்பாணத்தில்...



## ஹட்டனில்...



## களுவாஞ்சிகுடியில்...



## சாய்ந்தமருதில்...



## திருகோணமலையில்...



சிரியா

## சிரியாவில் வெடித்த கலவரம்

# பலி எண்ணிக்கை 1000த்தை தாண்டியது



சிரியாவின் பாதுகாப்புப் படையினர் மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஆசாத் ஆதரவாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட கடும் மோதலில் இரு தினங்களில் மட்டும் பொதுமக்கள் உள்பட 1,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி ஆசாதுக்கு ஆதரவாக இருந்த அலவைட் சிறுபான்மை பிரிவினருக்கு எதிராகக் கடந்த வியாழக்கிழமை (06) அன்று அந்த நாட்டின் தற்போதைய அரசு ஆதரவாளர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியது இந்த கலவரத்துக்குக் காரணமாக அமைந்துள்ளது என்ற தகவல் கிடைத்துள்ளது. இதற்குப் பதில் தாக்குதலை ஆசாத் ஆதரவாளர்கள் கொடுத்துள்ளனர்.

2024ஆம் ஆண்டு டிசெம்பரில் துருக்கி ஆதரவு பெற்ற ஹயாத் தஹ்ரிர் அல் ஷாம் (எச்டிஎஸ்) கிளர்ச்சி படை சிரியாவை கைப்பற்றியது. அதையடுத்து அப்போது ஜனாதிபதியாக இருந்த ஆசாத் வெளிநாட்டுக்குத் தப்பினார். இந்நிலையில், துப்பாக்கிச் சூடு சம்பவத்தை அடுத்து அந்த நாட்டின் வடமேற்கில் உள்ள கடலோர பகுதிகளான டார்டஸ் மற்றும் லடாகியா மாகாணங்களில் சிரியா பாதுகாப்புப் படை மற்றும் ஆசாத் ஆதரவாளர்களுக்கு இடையே மோதல் வெடித்தது.

அங்கு நிலவும் அசாதாரணச் சூழலைக் கட்டுப்படுத்த கூடுதல் படைகளை அந்தப் பகுதிக்கு அனுப்பியது அந்த நாட்டின் இடைக்கால அரசு. அதன் பலனாக தற்போது வன்முறைச் சம்பவம் கட்டுக்குள் வந்துள்ளதாக அந்த நாட்டின் அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. சிரியாவின் வடமேற்கில் உள்ள கடலோர பகுதிகளுக்குச் செல்லும் சாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. ஊரடங்கு உத்தரவும் அமலில் உள்ளது.

இரு தரப்புக்கும் இடையே இரண்டு நாட்களாக நடந்த மோதலில் 1,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் 745 பேர் பொதுமக்கள், 125 பேர் பாதுகாப்புப் படையினர், 148 பேர் ஆசாத் ஆதரவாளர்கள் என்பதை சிரியாவின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் உறுதி செய்துள்ளது.

பிரான்ஸ்

## சிகிச்சைக்கு வந்த 299 பேரிடம்

# பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட வைத்தியர்

பிரான்ஸ் நாட்டில், தன்னிடம் சிகிச்சைக்கு வந்த 299 பேரிடம், வைத்தியர் ஒருவர் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்ஸ் நாட்டின் வான்னெஸ் நகரைச் சேர்ந்த அறுவை சிகிச்சை நிபுணரான ஜோயல் லிஸ்கோர்னெக்(வயது 74), கடந்த 2017ஆம் ஆண்டு, பணியில் இருந்து ஓய்வு பெற்றார். இவர் மீது ஏற்கெனவே குழந்தைகள் தொடர்பான ஆபாச புகைப்படங்களை வைத்திருந்ததாகக் கடந்த 2005ஆம் ஆண்டு வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த வைத்தியர் மீது ஏராளமான பெண்கள் பாலியல் புகார் தெரிவித்துள்ளனர். இதில் பெரும்பாலானோர் இவரிடம் சிகிச்சைக்காகச் சென்றவர்கள் என்றும், அவர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான சமயத்தில் மைனர்களாக இருந்துள்ளனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில், குறித்த வைத்தியர் இதுவரை 299 பேரிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டுள்ளார் என தெரியவந்துள்ளது.

அவர் கடந்த 1989ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை பணிபுரிந்து வந்த வைத்தியசாலைகளில் இந்த பாலியல் அத்துமீறல்கள் அரங்கேறியுள்ளன.

குறிப்பாக நோயாளிகள் மயக்க நிலையில் இருக்கும்போது அவர்களிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதாக விசாரணையின்போது குறித்த வைத்தியர் தெரிவித்துள்ளார்.

அது மட்டுமின்றி, தனது மகனின் தோழிகளையும் இவர் பாலியல் வன்கொடுமை செய்ததாக வாக்குமூலம் அளித்துள்ளார்.

இந்த பாலியல் அத்துமீறல் வழக்கு பிரான்ஸ் நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

புதுடெல்லி

# பெண்களே இயக்கிய ‘வந்தே பாரத்’ ரயில்



சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு, மகாராஷ்டிராவில், பெண்கள் ‘வந்தே பாரத்’ என்ற ரயிலை இயக்கியுள்ளனர்.

சர்வதேச பெண்கள் தினம், சனிக்கிழமை(8) உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. இந்நிலையில், மகாராஷ்டிர மாநிலம் சத்ரபதி சிவாஜி மகராஜ் டெர்மினலில் இருந்து ஷீரடி செல்லும் ‘வந்தே பாரத்’ விரைவு ரயிலை (22223) முழுக்க முழுக்க பெண்களே இயக்கியுள்ளனர்.

இதற்கு இந்திய ரயில்வே அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த ரயிலை இயக்கிய ஓட்டுநர், துணை ஓட்டுநர், உதவியாளர், ரயில் மேலாளர், டிக்கெட் பரிசோதகர் ரயில் பணியாளர்கள் என அனைவரும் பெண்களே இதில் இடம்பெற்றுள்ளதாக, இந்திய ரயில்வே தலைமை மக்கள் தொடர்பு அதிகாரி ஸ்வப்னில் நிலா தெரிவித்துள்ளார்.

உத்தர பிரதேசம்

## அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகத்தில்

# ஹோலி கொண்டாட அனுமதி



உத்தரப் பிரதேசத்தின் அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகத்தில் (ஏ.எம்.யு.), முதன்முறையாக ஹோலி கொண்டாட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மத்தியப் பல்கலைக்கழகமான ஏஎம்யுவில் முஸ்லிம்களின் அனைத்து நிகழ்வுகளும் கொண்டாட அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில், ஹோலி கொண்டாடவும் அனுமதி கோரி இந்து மாணவர்கள் சிலர் நிர்வாகத்திடம் மனு அளித்துள்ளனர்.

இதற்கு நிர்வாகம், ஏற்கெனவே இந்து மாணவர்கள் வளாகத்தில் ஹோலி கொண்டாடுவதாகவும், இதற்காக என தனியாக அனுமதி அளித்து ஒரு புதிய பாரம்பரியத்தைத் தொடங்க விரும்பவில்லை என்றும் கூறி மறுத்து விட்டுள்ளனர்.

இதை எதிர்த்து இந்துத்துவா அமைப்பான கர்ணி சேனாவினர் கடந்த 6ஆம் திகதி ஏ.எம்.யு. வாயிலில் போராட்டம் நடத்தியதுடன், இப்பிரச்சினையில் பிரதமர் மோடி தலையிட வலியுறுத்தி டெல்லிக்கு மனு அனுப்பியுள்ளனர்.

இவர்களுக்கு ஆதரவாக பாஜகவின் அலிகர் எம்.பி.சதீஷ் கவுதம், மாநிலங்களவை பா.ஜ.க. எம்.பி.பிரிஜ் லால் உள்ளிட்டோரும் குரல் கொடுத்தனர்.

இந்த நிலையில், ஏஎம்யு நிர்வாகம் நேற்று முதன்முறையாக ஹோலி கொண்டாட அனுமதி அளித்து அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதில், மார்ச் 13, 14 ஆகிய திகதிகளில் ஏ.எம்.யுவின் என்.ஆர்.எஸ்.சி. அரங்கின் மண்டபம் ஹோலி கொண்டாடத் திறக்கப்பட்டிருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. ஏஎம்யு நிர்வாகம் வேறுவழியின்றி முதன்முறையாக இந்த முடிவை எடுத்து இந்துத்துவா அமைப்பினருக்குப் பணிந்திருப்பதாகக் கருதப்படுகிறது.



## இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# பொரெஸ்டிடம் தோற்ற சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நொட்டிங்ஹாம் பொரெஸ்டின் மைதானத்தில் சனிக்கிழமை (08) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில், 0-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி தோற்றது.

பொரெஸ்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை கலும் ஹட்சன்-ஒடோய் பெற்றிருந்தார்.

இந்நிலையில், வொல்வர்ஹம்ப்டன் வொன்டரேர்ஸின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் சமப்படுத்தியது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 70 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் காணப்படுகின்றது. 54 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 51 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் பொரெஸ்டும், 47 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் சிற்றியும் காணப்படுகின்றன. இதில் மற்றைய அணிகளை விட ஆர்சனல் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளதுடன், லிவர்பூல் ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளது.

## கொழும்பு சேர் ராசிக் பரீட் விளையாட்டுப் போட்டி:

# முதலிடம் பெற்றது சபா இல்லம்

கொழும்பு சேர் ராசிக் பரீட் முஸ்லிம் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியானது கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றபோது, சபா இல்லம் முதலிடத்தைப் பெற்றது.




## ஜேர்மனிய பெண்டெலிஸ்கா தொடர்:


# போச்சிடம் தோற்ற மியூனிச்

ஜேர்மனிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பெண்டெலிஸ்கா தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை (08) நடைபெற்ற வி.எவ்.எல். போச்சுமுடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் பயேர்ண் மியூனிச் தோற்றது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற வேர்டர் ப்ரூமனுடனான போட்டியில், 0-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பயெர் லெவர்குசன் தோற்றது.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற அகஸ்பேர்க்குடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் பொரூசியா டொட்டமுண்ட் தோற்றது.

பெண்டெலிஸ்கா புள்ளிகள் பட்டியலில் 61 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் மியூனிச் காணப்படுகின்றது. 53 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் லெவர்குசனும், 44 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் மைன்ஸும், 42 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் ஐன்ரச்ட் பிராங்க்பேர்ட்டும் காணப்படுகின்றன. இதில் மற்றைய அணிகளை விட பிராங்க்பேர்ட் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.



## சர்வதேச மாஸ்டர்ஸ் லீக்:

# மே. தீவுகளை வென்ற இந்தியா




சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் தொடரில், ரய்ப்பூரில் சனிக்கிழமை(08) நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் மாஸ்டர்ஸ் அணியுடனான போட்டியில் இந்திய மாஸ்டர்ஸ் அணி வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

இந்தியா: 253/3 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: அம்பாதி ராயுடு 63 (35), சௌரப் திவாரி 60 (37), யுவ்ராஜ் சிங் ஆ.இ 49 (20), குர்கீரட் சிங்க் மன் 46 (21), இர்பான் பதான் ஆ.இ 14 (07) ஓட்டங்கள்)

மே. தீவுகள்: 246/6 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: டுவைன் ஸ்மித் 79 (34), வில்லியம் பேர்க்கின்ஸ் 52 (24), லெண்டில் சிமொன்ஸ் 38 (13), நரசிங் டினாரயணி 28 (20), அஷ்லி நேர்ஸ் ஆ.இ 21 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஸ்டுவேர்ட் பின்னி 3/13 [2])

போட்டியின் நாயகன்: ஸ்டுவேர்ட் பின்னி

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 10, மார்ச் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.